From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 162/2021

Deposition of witness for: PW - 10

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயலட்சுமி | Father/Husband Name | : வீரணன் |
| Age | : | Calling | : |
| Date | : 18.11.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18 day of 11.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது ஊமச்சிக்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.08.2021ம் தேதி ஒத்தக்கடை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது 17.00 மணியளவில் ஒத்தக்கடை நரசிங்கம் அம்மச்சிஅம்மன் தெருவை சேர்ந்த பிச்சை மகன் கருப்பசாமி ரமேஷ் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற 481/2021 பிரிவு 454, 380 இதசன்கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). பின்னர் 17.45 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரபு மற்றும் பொன்னம்பலம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். ( **அந்த மாதிரி வரைபடம் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் சாட்சிகள் வாதி கருப்பசாமி ரமேஷ், அங்காளஈஸ்வரி, சேதுபதி, மற்றும் கணேசன் ஆகியோர்களை விசாரானை ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மேல்

விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் வழக்கு கோப்பை 09.08.2021ம் வழக்கு கோப்பை பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை

புகார்தாரர் தனது புகார் மனுவில் திருட்டுபோன நகையின் மதிப்பு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் நகையின் மதிப்பு சுமார் ரூ.1 லட்சம் என்று எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அன்றையதேதியில் அரசு நிர்ணயித்த மதிப்பை குறிப்பிட்டுள்ளேன். நகை மதிப்பீட்டாளர் மூலம் நகையை மதிப்பிடவில்லை என்றால் சரிதான். அசாஆ 2 பார்வை மகஜரை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசா1யை எந்த இடத்தில், எத்தனை மணிக்கு, எந்ததேதியில் விசாரித்தேன் என்றால் 07.08.2021ம் தேதி சுமார் 18.15 மணிக்கு வாதியின் வீட்டின் முன் வைத்து விசாரித்தேன். நான் இவ்வழக்கினை மேல் விசாரணைக்க எந்த தேதியில், எத்தனை மணிக்கு எனது மேல் அதிகாரியிடம் ஒப்படைத்தேன் என்றால் கடந்த 09.08.2021ம் தேதி புலன்விசாரணை அதிகாரி சாட்சிகளை விசாரணை செய்தபோது நான் உடன் இருந்தேனா என்றால் அன்றைய தேதியில் நான் இல்லை.

2) புகார்மனுவில் அசா1ன் வீட்டின் தலைவாசல் உடைக்கப்பட்டு, வீட்டின் படுக்கை அறையில் உள்ள பீரோ உடைக்கப்பட்டிருந்த விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அசா3 தனது விசாரணையில் அசா1ன் வீட்டிலிருந்த பீரோ என்ன நிலையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் வீட்டின் தலைவாசல் உடைக்கபட்டு இருந்தாக தகவல் தெரிந்ததாக சொல்லியுள்ளார். மேற்கூறிய கதவு மற்றும் பீரோ உடைக்கப்பட்டிருந்த பாகங்கள் ஏதேனும் நான் கைப்பற்றினோ

என்றால் அவை சம்பவ இடத்தில் இல்லாததால் கைப்பற்றவில்லை.

3) அசாஆ 2 ஆன பார்வை மகஜரில் கேரளா மாடல் நகை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொன்னஇடத்தில், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.